**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 111/ 2024**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 11.02.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : விஸ்வநாதன் | Age | : |
| Father's Name | : | Village | : |
| Calling | : | Taluk | : |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக நான்தான் புகார் கொடுத்தேன். நான் 5–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. இந்த வழக்கில் நான் அதை தாக்கல் செய்யவில்லை. எனக்கு வாகனம் ஓட்டத் தெரியாது என்றும், எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், ஆகையால்தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஓட்டிய வாகனம் எனது மகனுக்கு சொந்தமானது ஆகும். எனது மகன் எவ்வளவு அபராதம் செலுத்தினார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அபராதம் செலுத்தித்தான் எடுத்து வந்தார்.

நெரூர் – கரூர் சாலையில் வடக்கு நோக்கி செல்லும் சாலை சில வீடுகளுக்கு செல்லும் சாலையாகும். அந்த சாலை மலையாளன்சாமி கோவிலுக்கு செல்லும் சாலை என்றால் சரிதான். தண்டபாணி, மணிவண்ணன் ஆகியோர் அந்த சாலையிலிருந்துதான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார்கள் என்றால் சரிதான். நான் ஓட்டிய வாகனத்திற்கும், தண்டபாணி மற்றும் மணிவண்ணன் ஆகியோர் ஓட்டிய வாகனத்திற்கும் முன் பக்கம் சேதம் ஏற்பட்டது என்றால் என் வாகனத்திற்குத்தான் முன் பக்கம் சேதம் ஏற்பட்டது. அவர்கள் வாகனத்திற்கு எந்த பக்கம் சேதம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை.

விபத்து மலையாளன்சாமி கோவிலுக்கு செல்லும் சாலைக்கு எதிரில் நடைபெற்றது என்றால் அதற்கும் சற்று தள்ளி நடைபெற்றது. நான் விவசாய கூலி வேலை செய்து வருகின்றேன். என் மகன் வேலைக்கு செல்கின்றார். நான் கொடுத்துள்ள புகாரிர், இந்த வழக்கின் மனு மற்றும் முதல் விசாரணையில் விபத்து சமயத்தில் நான் தலை கவசம் அணிந்து சென்றதாக சொல்லவில்லை என்றால்

அவ்வாறு யாரும் என்னிடம் கேட்கவில்லை. ஆகையால் நான் சொல்லவில்லை. விபத்து சமயத்தில் நான் தலை கவசம் அணிந்து செல்லாததால்தான் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டது என்றால் சரிதான். எனது வயது, வருமானம், வயது, தொழில் ஆகியவற்றை நிரூபிக்கவில்லை என்றால் சரியல்ல.

இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவினால்தான் நடைபெற்றது என்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள மாதிரி வரைபடத்தில் சாலையின் இடது பக்கத்தில் நடைபெற்றதாக சொல்லியுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவுதான் காரணம் என்றும், ஆகையால் நான் பயணம் செய்த வாகனத்தின் உரிமையாளர்தான் எனக்கு இழப்பீடு வழுங்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு கழகத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை மேற்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் குறிப்பிட்டுள்ள உபாதைகள் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஒம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 111/ 2024**

Deposition of PW - 2 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 11.02.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **தண்டபாணி** | Age | : | |
| Father's Name | : | | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**முதல் விசாரணை**

நான் எம்.சி.ஓ.பி.144/2024–ன் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.9 | | காயச்சான்றிதழ் | சான்று நகல் |
| ம.சா.ஆ.10 | | மருத்துவ சிகிச்சை விவரக்குறிப்பு மற்றும் விடுவிப்பு அறிக்கை | அசல் |
| ம.சா.ஆ.11 | | மருத்துவ ரசீதுகள் (ரூ.1,47,465/–) | பதிவிறக்க நகல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து 02.10.2022–ம் தேதியன்று நடைபெற்றது. நான் தாக்கல் செய்துள்ள ஆம்புலன்ஸ் பில்கள் 01.10.2022–ம் தேதி குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான்தான் வாகனத்தை ஓட்டினேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் விபத்தின்போது ஓட்டிய வாகனம் எனது அண்ணனுக்கு சொந்தமானது. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை தற்போது வரை எடுக்கவில்லை. அபராதத் தொகை அதிகமாக இருந்ததால் அந்த வாகனத்தை தற்போது வரை எடுக்கவில்லை. நான் பெயிண்டராக வேலை செய்கின்றேன். மலையாளசாமி கோவிலுக்கு சென்றுவிட்டு வரும்போதுதான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான்.

நான் பயணம் செய்த வாகனத்திற்கு பின் பக்கம் சேதம் ஏற்பட்டது. நான் நெரூர் – கரூர் சாலைக்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டது. கார் எனது வாகனத்தின் பின் பக்கத்தில் மோதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மெயின் ரோட்டிற்கு வந்து நேராக சென்றபோது எனக்கு பின்னால் வந்த கார் வேகமாக வந்து மோதிவிட்டது. நான் நெரூர் – கரூர் சாலையில் 50 மீட்டர் கடந்து சென்றபோது விபத்து ஏற்பட்டது. எனது வாகனத்திற்கு பின் பகுதியில் எந்த சேதாரமும் இல்லை என்றாலும், எனது வாகனத்திற்கு முன் பக்கத்தில்தான் சேதம் என்றால் சரியல்ல. எனக்கு முறையாக வாகனம் ஓட்டத்தெரியாது என்றும், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் தாறுமாறாக ஓட்டி சென்று காரில் மோதி நான்தான் விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. நான்பயணம் செய்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம்தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வயது, வருமானம், வயது, தொழில் ஆகியவற்றை நிரூபிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனக்கு எந்த நிரந்தர ஊனமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ள உபாதைகள் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடன் வந்தவர்கள் தலை கவசம் அணியாமல் பயணம் செய்தார்கள் என்றால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 111/ 2024**

Deposition of PW - 3 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 11.02.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணிவண்ணன்** | Age | : |
| Father's Name | : | Village | : |
| Calling | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் எம்.சி.ஓ.பி.198/2024–ன் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.12 | | காயச்சான்றிதழ் | சான்று நகல் |
| ம.சா.ஆ.13 | | மருத்துவ சிகிச்சை விவரக்குறிப்பு மற்றும் விடுவிப்பு அறிக்கை | அசல் |
| ம.சா.ஆ.14 | | மருத்துவ ரசீதுகள் (ரூ.35,358/–) | அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து 02.10.2022–ம் தேதியன்று நடைபெற்றது. விபத்து சமயத்தில் நான் வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றேன். நான் விபத்தின்போது ஓட்டிய வாகனம் எனது அண்ணனுக்கு சொந்தமானது. நான் விவசாய வேலை செய்கின்றேன். மலையாளசாமி கோவிலுக்கு சென்றுவிட்டு வரும்போதுதான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான்.

நான் பயணம் செய்த வாகனத்திற்கு பின் பக்கம் சேதம் ஏற்பட்டது. நான் நெரூர் – கரூர் சாலைக்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டது. கார் எங்கள் வாகனத்தின் பின் பக்கத்தில் மோதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மெயின் ரோட்டிற்கு வந்து நேராக சென்றபோது எங்களுக்கு பின்னால் வந்த கார் வேகமாக வந்து மோதிவிட்டது. நாங்கள் நெரூர் – கரூர் சாலையில் 50 மீட்டர் கடந்து

சென்றபோது விபத்து ஏற்பட்டது. எங்கள் வாகனத்திற்கு பின் பகுதியில் எந்த சேதாரமும் இல்லை என்றாலும், எங்கள் வாகனத்திற்கு முன் பக்கத்தில்தான் சேதம் என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் தாறுமாறாக ஓட்டி சென்று காரில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நாங்கள்தான் காரணம் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம்தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வயது, வருமானம், வயது, தொழில் ஆகியவற்றை நிரூபிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனக்கு எந்த நிரந்தர ஊனமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ள உபாதைகள் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |